தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1979 மார்ச் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு என். மாணிக்கம் அவர்கள் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் தேதியன்று மறைந்ததை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். மாணிக்கம் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டு வரை பொன்னாகரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Land leased out to Madras Race Club.

*Q. No. 238. Thiru SALEM M.ARUMUGAM: will the Hon. the Minister for Revenue be pleased to state.

(a) the total area that has been leased out to the Madras Race Course in Guindy, Madras, and

(b) the steps taken to recover the land?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, விடை (அ) மற்றும் (ஆ)—அரசுக்குச் சொந்தமான 160.86 ஏக்கர் நிலம் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. குதிரைப் பந்தயங்களில் சூதாடுதலையும் பணயம் கட்டுதலையும் அரசு ஒழித்ததற்கு எதிராக சென்னைக் குதிரைப் பந்தய சங்கம் தொகுத்துள்ள உரிமையியல் மேல் முறையீடு மனுமீது தலைமை நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது, மேற்சொன்ன வழக்கின் தீர்ப்பு அறிவித்தபின் குதிரைப் பந்தய சங்கத்திற்கு வழங்கியுள்ள 99 வருட குத்தகையை ரத்து செய்ய சட்டம் இயற்றலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பேரறிஞர், அண்ணா அவர்கள் குதிரைப் பந்தயத்தை அறவே நீக்க வேண்டுமென்ற யோசனையை அறிவித்து இருந்தார்கள். அதனையொட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்கு ஏற்பாடுகள் செய்து அது வழக்குமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தப் புதிய அரசு, அரசாங்கமே முன்வந்து குதிரைப் பந்தயத்தை நடத்துவதற்கு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தவிதமான சூதாட்டமானாலும் அதை நிறுத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் உள்ளவர் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இந்த அரசு அந்த எண்ணத்திற்கு மாறாகப் போகாது. மற்றவற்றைப்பற்றி இந்த அரசு யோசித்துக்கொண்டு இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்த ஹார்ஸ் ரேஸ் நடத்துவது மட்டுமல்லாமல் அந்த கிளப்பின் செகரட்டரியினுடைய எமால்யுமென்ட்ஸ் கவர்ன்மென்ட் அப்ரூவலுக்கு உட்பட்டது என்று சொல்லப்படுகிறது. அந்த கிளப்பினுடைய செகரட்டரி சௌபே மாதம் 25 ஆயிரம் ரூபாய் சம்பளம் என்று பிக்ஸ்பண்ணி வாங்குவதாகச் சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல. அங்கே ஹையஸ்ட் பிட்டர் என்றால் 5 சதவீதம் கமிஷன் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே ஊழல்கள் நடைபெறுகின்றன. அந்த சம்பளத்தைக் குறைக்கவும், அந்த ஊழல் சம்பந்தமாக என்குயரி நடத்துவதற்கும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, ஊழல் நடந்தால் அதைப்பார்த்து அதை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யும். சம்பளம் அதிகம் என்பதும் அந்த ஊழலிலே சேர்ந்துவிட்டிருக்கிறது அல்லவா ?

1979 மார்ச் 6]

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, இதுவரையில் குதிரைப் பந்தய கிரவுண்டுக்குள்ளே நடந்து கொண்டிருந்தது. ஆனால், தற்பொழுது சென்னை நகரத்தில் புக்கீஸ்களுக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்டு, தெருவெல்லாம் குதிரை பந்தய சூதாட்டம் நடந்து கொண்டிருக்கிறதே. அப்படி டவுனிலே எத்தனையிடங்களுக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, அப்படி நகரங்களில் பல லைசன்ஸ்கள் கொடுத்து, அங்கேயெல்லாம் டிக்கெட் விற்கப்படுவதாக அரசின் கவனத்திற்கு வந்தது. அரசின் கவனத்திற்கு வந்தது மட்டுமல்லாமல், அங்கே டிக்கெட்டே விற்காமல் பணத்தை மட்டும் வாங்கிக்கொள்கிறார்கள் என்பதும் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தது. அப்படி வரும்பொழுது, வணிகத் துறைக்கு விற்பனை வரிஇல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்தது. அதைப்பற்றி அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது என்ற நல்ல செய்தியைச் சொல்கிறேன்.

திரு. அ. செல்வராசன்: தலைவரவர்களே, நானும் அதே கேள்வியைத்தான் எழுப்ப விரும்புகிறேன். இப்பொழுது சென்னையில் ஒரு வீதிக்கு மூன்று நான்கு கடைகள் இப்படித் திறக்கப்பட்டு சென்னை வாழ் மக்களை மிகவும் மோசமாகப் பாதிக்கிறது. அருள்கூர்ந்து உடனடியாக இதில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். இதில் மிகவும் ஏழை எளியவர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னபடி அதில் அரசாங்கத்திற்கும் செலுத்தாமல் அவர்களே மோசடி செய்கிறார்கள். ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, அரசாங்கத்திற்கு வரி கொடுக்காமல் விற்பனை வரியை பெரும்பாலும் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான அளவில் ஏமாற்றுவதாகத் தெரிகிறது. நாம் முயற்சி செய்கிறோம். இந்தப் பேரவை மூலமாகவும், இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் மூலமாகவும் பொதுமக்களை நான் கேட்டுக் கொள்வேன், எங்கெங்கே இந்த ஏய்ப்பு இருக்கிறதோ அவைகளைக் கண்டுபிடித்துத் தடுக்க, நடவடிக்கை எடுக்க உறுப்பினர்கள் ஒத்தாசைத் தர வேண்டுமென்று மிக்க பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. தனசேகரன்: பேரவைத் தலைவரவர்களே, குதிரைப்பந்தய மைதானத்திற்குள்ளேயே புக்கிகள் தனியார் வைத்திருக்கிறார்கள். அந்தப் புக்கிகள் தனியார் நடத்தி அதிகப்படியான அளவில் பணம் சம்பாதித்து வரி ஏய்ப்பு பலவகையிலும் நடக்கிறது. அதைத் தடை செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, நான் முதலிலேயே அதற்குப் பதில் சொல்லி யிருக்கிறேன்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், குதிரைப் பந்தயம் சூதாட்டம் என்பதை அமைச்சரவர்கள் ஒப்புக் கொண்டார்கள். இப்படிப்பட்ட சூதாட்டம் பல பொது மக்களுக்குக் கெடுதலாக இருக்கிறது. ஆகவே, இந்த அரசு குதிரைப் பந்தயத்தை ஒழிக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, சூதாட்டம் எதுவாக இருந்தாலும் அதைப்பற்றி யெல்லாம் ஒழிக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

நாயுடுமங்கலம் கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலம்.

*வினா எண் 239—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதி நாயுடுமங்கலம் கிராமத்தில் இருந்த புறம்போக்கு நிலத்தை மின்சார வாரியம் சப்-ஸ்டேஷன் அமைக்கக் கோரி விண்ணப்பம் கொடுத்திருந்தும் தனிப்பட்டவருக்கு அடைமானம் செய்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம், எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(இ) இந்த நிலத்தை விரைவில் மின்வாரியத்திற்கு மறு ஒப்படை செய்ய நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அவர்களுக்கு நீண்ட காலத்திற்கு முன்னால், 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் தேதிக்கு முன்னால் அந்த நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பிறகுதான் எலக்ரிசிட்டி போர்டு நிலம் வேண்டுமென்று கேட்டிருக்கிறது. இதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, அது ஆளுநர் ஆட்சியின்பொழுது நடந்தது. முதலிலே மின்சார வாரியம் இந்த இடம் வேண்டுமென்று கேட்டிருந்தது. அதற்குப் பிறகு அந்த நேரத்திலே இருந்த அதிகாரிகள் தனிப்பட்டவர்களுக்கு அதை அடைமானம் செய்து கொடுத்திருக்கிறார்கள். ச